**வண்ணாத்திவில்லு பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னையஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| குருனாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனத்தின் பெறுமதி ரூபா 3,000,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ரூபா 30 இலட்சம் என மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க சொத்துக்களாக ஏடுகளுக்கு கொண்டுவரப்படும் | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 173,542,915 பெறுமதியான காணியும் கட்டிடமும் மீளாய்வுச் சபை அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் உரிய மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | காணியும், கட்டிடங்களும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 7,232,699 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,141,870ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப் பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப் பட்ட வருமானம ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீத வரியும் வரியும் | 2,712 | 2,389 | 415 | 3,303 | 2,668 | 2,270 | 559 | 2,451 |
| வாடகை | 60,254 | 40,586 | 18,061 | 7,601 | 7,944 | 38,126 | 36,554 | 2,170 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 417 | 603 | 435 | 370 | 392 | 251 | 122 | 201 |
| ஏனைய வருமானம் | 29,253 | 31,399 | 29,946 | 2,439 | 8,848 | 6,377 | 2,524 | 4,849 |
| மொத்தம் | 92,636 | 74,977 | 48,857 | 13,713 | 19,852 | 47,024 | 39,759 | 9,671 |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி ரூபா 776,330, நிலுவையான ஏக்கர் வரி ரூபா 203,040, நிலுவையான நிர் வரி ரூபா 1,970,622, மூன்று வியாபார நிலையங்கள் தொடர்பான மொத்தமாக ரூபா 7,690,620 நிலுவை வாடகை என்பன அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வு செய்து ஏக்கர் வரி அறவீடு செய்யக்கூடிய காணிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பின்னர் இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏக்கர் வரி அறவிடக்கூடிய காணிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வியாபார உத்தரவுப் பத்திரம் மற்றும் வியாபார வரிக்காக மீளாய்வினை மேற்கொண்டு உரிய கட்டணங்கள் அறவீடு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 811,900 பணம் நிலுவையாகக் காணப்பட்டது. | மீளாய்வினை மேற்கொண்டு உரிய கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வினை மேற்கொண்டு வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பயன்கடுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மயிலங்குளம் ஆயுர்வேத நிலையத்தில் ரூபா 75,000 பெறுமதியான கணனி இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணனி இயந்திரத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 2,811,200 தொகையான உடலை மேம்படுத்துதல் உபகரணங்களின் இருப்பு மற்றும் அந்த உடலை மேம்படுத்தும் உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 02 நிலையங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | வண்ணாத்தவில்லு உடலை மேம்படுத்தும் நிலையம் தற்பொழுது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் கரத்தீவு உடலை மேம்படுத்தும் நிலையத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உடலை மேம்படுத்தும் உபகரண இருப்பினையும் அந்த உடலை மேம்படுத்தும் உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 02 நிலையங்களையும் துரிதமாக வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வண்ணாத்தவில்லு புதிய எலுவன் குளம் கிராமத்திற்கு ஒரு நீர் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு ரூபா 2,852,687 பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்பம்பி பொருத்தப்படாததன் காரணமாக இச்செயற்திட்டம் விளைவற்றுக் காணப்பட்டது. | மாகாண குறித்தொதுக்கிய பணம் ஒதுக்கீடு செய்யப்படாததுடன் எங்கள் நிறுவனத்திடம் போதியளவு நிதி நிலைமையானது சபை நிதியத்தில் இல்லாததனால் இதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நீர் செயற்திட்டத்தை துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 18,810,263 ஆக இருந்ததுடன் அதனுள் 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,513,137 மீதியும் காணப்பட்டது. | பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதியின் பெறுமதி ரூபா 10,051,794 ஆக இருந்ததுடன் அவற்றில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,921,003 ஆகும். | பின்னர் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பெறுப்பேற்கப்படாத 50 ஆதனங்கள் காணப்பட்டதுடன் உரிய சொத்துக்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் அது துரிதமாகச் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கிறேன். | உரிய ஆதனங்களை பொறுப்பேறப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 வாகனப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் ஒரு விசேட மீளாய்வின் மூலம் கைதவிர்ப்புச் செய்வதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள உழவு இயந்திரம் கைதவிர்ப்புச் செய்யாது துருப்பிடித்துக் காணப்பட்டது. | உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | விசேட மீளாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வண்ணாத்தவில்லு பிரதேச செயலகத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது 03 மாத காலத்திற்காக ஒரு உழவு இயந்திரமும் ஒரு பவுசரும் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உழவு இயந்திரத்தினையும் பவுஸரினையும் முறைப்படி மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபை காணியில் நிறுத்திவைக்கப்பட்டு துரப்பிடித்து காணப்படுகின்றது. | முறைப்படியாக மீள ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | உழவு இயந்திரத்தினையும் பவுஸரினையும் முறைப்படியாக மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 21 செயற்பாடுகளுக்காக ரூபா 32,160,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் எதிர்பார்த்த பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்படாது செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. | உரிய செலவு செய்தல்கள் தேவையற்றது என்ற அடிப்படையிலும் நாட்டில் காணப்பட்ட பாதகமான நிலைமையின் அடிப்படையிலும் செலவு செய்வதற்கு முடியாமையால் உரிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முக்கியமான துறைகளை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வினை திட்டமிட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 4.3. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2030 இன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் போது அவை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் சரியாக நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க உரிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |